Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 200 /2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW -4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பழனிவேல் | Father Name | : | சுவாமிநாதன் |
| Village | : | சித்தன்வாழூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09th day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரியைத் தெரியும். எனது மைத்துனர். கடந்த 13.06.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்தேன். வீட்டிற்குள் நுழையும் போது அ.சா.1 வீட்டு வாசலில் நின்று கொண்டு அழுதுகொண்டிருந்தார். எனது மாமனார் கொல்லையில் உள்ள மரத்தை வெட்டும்போது பிரச்சனை ஏற்பட்டதாகவும் அதில் ஆஜர் எதிரி அ.சா.1 ஐ செறுப்பால் கன்னத்தில் அடித்துவிட்டதாகவும் கூறினார். அ.சா.1க்கு சம்பவத்தில் ஏற்பட்ட மயக்கம் மற்றும் வலிக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

அழைத்து சென்றேன். அங்கு அவர் சுமார் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது மனைவிக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கள் தொடர்பாக வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சமரசம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல, ஐம்பதாயிரம் கொடுத்து அசலும் வரவில்லை, வட்டியும் வரவில்லை. இது தொடர்பாக அடிக்கடி எனது மனைவிக்கும் மைத்துனருக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மனைவியை மருத்துவமனையில் போலீசார் விசாரிக்கும்போது நான் அருகில்தான் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது அருகில் யாரும் இல்லை என்று எனது மனைவி போலீசாரிடம் வாக்குமூலத்தில் கூறியபோது நான் அருகில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனது மனைவி என்னிடம் சொல்லி அதனை நான் அ.சா.2 மற்றும் அ.சா.3 யிடம் கூறியபின்புதான் அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் எப்போது விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.09 19:07:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.